குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
... : : சுன்னாகம்,
இலங்கை

சிவமயம்.



# திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளும் சுந்தரமூர்த்தி சுவாமிகளும்

அருளிச்செய்த

# திருக்கேதீச்சரத் தேவாரப் பதிகங்களும்,

தக்ஷிணகைலாச மான்மியத்தில்
கூறப்பட்டுள்ள

# திருக்கேதீச்சர மகிமையும்.

திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபையார்
வெளியீடு 2.

## திருச்சிற்றம்பலம்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றும் சிறந்து பொருந்திய திருக்கேதீச்சரத்தின் பழமை சரித்திர காலத்திற்கு முற்பட்டது. புராண இதிகாச காலத்தையுங் கடந்து நிற்பது. பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே இலங்கையின் பெருமைக்கு முக்கிய காரணங்களாயிருந்தவற்றுள் இத்திவ்விய க்ஷேத்திரமுமொன்றுகும்.

ஆயிரத்தெட்டுப் புராதன சிவஸ்தலங்களுள் சைவ சமய குரவராற் போற்றித்துதிக்கப்பட்டுப் 'பாடல் பெற்ற ஸ்தலம்' என்ற சிறப்புக்குரிமையுடையவை இருநூற்றெழுபத்து நான்காகும். இத்திவ்விய ஸ்தலங்களுள் திருக்கேதீச்சரமும் திருக்கோணமலையும் அடங்கியிருப்பதைப்பற்றி இலங்கைச் சைவ மக்களாகிய யாமெல்லோரும் என்றென்றைக்கும் பெருமையடையலாம். திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளும் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் தேவாரத் திருப்பதிகங்களால் துதித்த ஒன்றே திருக்கேதீச்சரத்தின் மகிமையை விளக்குதற்குப் போதியதாகும். வட இந்தியாவிலுள்ள காசியம்பதிக்கும், தென்னிந்தியாவிலுள்ள சிதம்பரத்துக்குமுள்ள தனிப் பெருமை இத் திருக்கேதீச்சரத்திற்கு முண்டெனக் கூறின் அது மிகையாகாது.

இப் புண்ணிய க்ஷேத்திரத்தின் பழம் பெருமைக்கும் மகிமைக்கும் ஏற்றபடி அங்கே ஓர் ஆலயம் கட்டுதற்கும், அதன் பக்கத்தில் நந்தவனம், மடம், வேதாகம பாடசாலை, வாசகசாலை, கலைக்கூடம் முதலியன அமைத்தற்கும் ஆகவேண்டிய முயற்சிகளைச் செய்தற்காக நிறுவப்பட்டதே திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபையாகும்.

இலங்கைச் சைவர்கள் பலர் இதுவரையில் இத் திவ்விய ஸ்தலத்தைத் தகுந்த முறையில் போற்ருது வாழ்ந்தது மன்றி அத் திருப்பதியில் கௌரி சமேதராக எழுந்தருளியுள்ள கேதீச்சரப் பெருமான்மீது பாடிய அருமைத் தேவாரங்களைச் செவ்வனே பாராயணம் செய்யாதும் விட்டனர். பல வருஷங்களாகக்கோயில் களிலும் பள்ளிக்கூடங்களிலும், குருபூசை நிகழுமிடங்களிலும் இத் தேவாரத்திருப்பாடல்கள் போதியளவு எடுத்தாளப்படாமை யால் அநேகருக்கு இத் திருப்பதிகங்கள் இருப்பதே தெரியாமற் போய்விட்டது. இக்குறையை நிவிர்த்திசெய்யவே மேலே குறிப் பிட்ட இரு திருப்பதிகங்களையும் இச் சிறு புஸ்தகத்தில் அச்சிட்டு வழங்குகின்ருேம். இந்நூலின் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ள சரித் திரம் தக்ஷிண கைலாசமான்மியத்திலிருந்து எடுக்கப்பட்டதாகும்.

இத் தேவாரத் திருப்பாடல்களைத் தினந்தோறும் பாராயணஞ் செய்யவேண்டியது சைவ நன்மக்களது முக்கிய கடமைகளுள் ஒன்ருகும். நமது சொந்த நாட்டிலுள்ள புண்ணிய க்ஷேத்திரத்தைக் குறித்து மகான்கள் அருளிய திருப்பாடல்களை நாம் அடிக்கடி பக்தி சிரத்தையோடு பாராயணஞ் செய்வதால் நாடு செழித்து, நமது சமயந்தழைத்து, மக்கள் நல்வாழ்வு பெறுவர் என்பது திண்ணம்.

சு. சிவசுப்பிரமணியம்,
காரியதரிசி,
திருக்கேதீச்சர ஆலயத்
திருப்பணிச்சபை.

கொழும்பு,
20—9—49.

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
மயிலணி : : சுன்னாகம்,

# திருக்கேதீச்சரம். பண் — நட்டராகம்.

---

## திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள்
## அருளிச்செய்த
## தேவாரத்திருப்பதிகம்.

---

திருச்சிற்றம்பலம்.

விருது குன்றமா மேருவி னாணர வாவன லெரியம்பாப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின் றுறைபதி யெந்நாளும்
கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ் பொழிலணி மாதோட்டம்
கருத நின்றகே தீச்சரங் கைதொழக் கடுவினை யடையாவே. 1.

பாடல் வீணையர் பலபல சரிதைய ரெருதுகைத் தருநட்டம்
ஆடல் பேணுவ ரமரர்கள் வேண்டநஞ் சுண்டிருள் கண்டத்தர்
ஈட மாவது விருங்கடற் கரையினி லெழிறிகழ் மாதோட்டம்
கேடி லாதகே தீச்சரந் தொழுதெழக் கெடுமிடர் வினைதானே. 2.

பெண்ணொர் பாகத்தர் பிறைதவழ் சடையின ரறைகழல் சிலம்
பார்க்கச்
சுண்ண மாதரித் தாடுவர் பாடுவ ரகந்தொறு மிடுபிச்சைக்
குண்ண லாவதோ ரிச்சையி னுழல்பவ ருயர்தரு மாதோட்டத்
தண்ண னண்ணுகே தீச்சர மடைபவர்க் கருவினை யடையாவே. 3.

பொடிகொண் மேனியர் புலியத ளரையினர் விரிதரு கரத்தேந்தும்
வடிகொண் மூவிலே வேலினர் நூலினர் மறிகடன் மாதோட்டத்
தடிக ளாதரித் திருந்தகே தீச்சரம் பரிந்தசிந் தையராகி
முடிகள் சாய்த்தடி பேணவல் லார்தம்மேன் மொய்த்தெழும்
வினைபோமே. 4.

நல்ல ராற்றவு ஞானநன் குடையர்தம் மடைந்தவர்க் கருளீய
வல்லர் பார்மிசை வான்பிறப் பிறப்பிலர் மலிகடன் மாதோட்டத்
தெல்லே யில்புக ழெந்தைகே தீச்சர மிராப்பக னினேந்தேத்தி
அல்ல லாசறுத் தரனடி யிணைதொழு மன்பரா மடியாரே. 5.

பேழை வார்சடைப் பெருந்திரு மகடனைப் பொருந்தவைத்
தொருபாகம்
மாழை யங்கையற் கண்ணிபா லருளிய பொருளினர் குடிவாழ்க்கை
வாழை யம்பொழின் மந்திகள் களிப்புற மருவிய மாதோட்டக்
கேழல் வெண்மருப் பணிந்தநீண் மார்பர்கே தீச்சரம் பிரியாரே. 6.

பண்டு நால்வருக் கறமுரைத் தருளிப்பல் லுலகினி லுயிர்வாழ்க்கை
கண்ட நாதனர் கடலிடங் கைதொழக் காதலித் துறைகோயில்
வண்டு பண்செயு மாமலர்ப் பொழின்மஞ்ஞை நடமிடு மாதோட்டம்
தொண்டர் நாடொறுந் துதிசெய வருள்செய்கே தீச்சர மதுதானே.

தென்னி லங்கையர் குலபதி மலைநலிந் தெடுத்தவன் முடிதிண்டோள்
தன்ன லங்கெட வடர்த்தவற் கருள்செய்த தலைவனர் கடல்வாயப்
பொன்னி லங்கிய முத்துமா மணிகளும் பொருந்திய மாதோட்டத்
துன்னி யன்பொடு மடியவ ரிறைஞ்சுகே தீச்சரத் துள்ளாரே. 8.

பூவு ளானுமப் பொருகடல் வண்ணனும் புவியிடந் தெழுந்தோடி
மேவி நாடிநின் னடியிணை காண்கிலா வித்தக மென்னுகும்
மாவும் பூகமுங் கதலியு நெருங்குமா தோட்டநன் னகர்மன்னித்
தேவி தன்னெடுந் திருந்துகே தீச்சரத் திருந்தவெம் பெருமானே. 9.

புத்த ராய்ச்சில புனைதுகி லுடையவர் புறனுரைச் சமணுதர்
எத்த ராகிநின் றுண்பவ ரியம்பிய வேழைமை கேளேன்மின்
மத்த யானையை மறுகிட வுரிசெய்து போர்த்தவர் மாதோட்டத்
தத்தர் மன்னுபா லாவியின் கரையிற்கே தீச்சர மடைமின்னே. 10.

மாடெ லாமண முரசெனக் கடலின தொலிகவர் மாதோட்டத்
தாட லேறுடை யண்ணல்கே தீச்சரத் தடிகளை யணிகாழி
நாடு ளார்க்கிறை ஞானசம் பந்தன்சொ னவின்றெழு பாமாலைப்
பாட லாயின பாடுமின் பத்தர்கள் பரகதி பெறலாமே. 11.

திருச்சிற்றம்பலம்.

---

உ

## பண் - நட்டபாடை

திருச்சிற்றம்பலம்.

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த
## திருக்கேதீச்சரத் தேவாரத்திருப்பதிகம்.

---

நத்தார்புடை ஞானன்பசு வேறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்றிருக் கேதீச்சரத் தானே. 1.

சுடுவார்பொடி நீறுநல்ல துண்டப்பிறை கீளும்
கடமார்களி யானையுரி யணிந்தகறைக் கண்டன்
படவேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
திடமாவுறை கின்றான்றிருக் கேதீச்சரத் தானே. 2.

அங்கம்மொழி யன்னாரவ ரமரர்தொழு தேத்த
வங்கம்மலி கின்றகடன் மாதோட்டநன் னகரில்
பங்கஞ்செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேல்
செங்கண்ணர வசைத்தான்றிருக் கேதீச்சரத் தானே. 3.

கரியகறைக் கண்டனல்ல கண்மேலொரு கண்ணன்
வரியசிறை வண்டியாழ்செயு மாதோட்டநன் னகருள்
பரியதிரை யெறியாவரு பாலாவியின் கரைமேல்
தெரியும்மறை வல்லான்றிருக் கேதீச்சரத் தானே. 4.

அங்கத்துறு நோய்களடி யார்மேலொழித் தருளி
வங்கம்மலி கின்றகடன் மாதோட்டநன் னகரில்
பங்கஞ்செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம்பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத் தானே. 5.

வெய்யவினை யாயவடி யார்மேலொழித் தருளி
வையமலி கின்றகடன் மாதோட்டநன் னகரில்
பையேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
செய்யசடை முடியான்றிருக் கேதீச்சரத் தானே. 6.

ஊனத்துறு நோய்களடி யார்மேலொழித் தருளி
வானத்துறு மலியுங்கடன் மாதோட்டநன் னகரில்
பானத்துறு மொழியாளொடு பாலாவியின் கரைமேல்
ஏனத்தெயி றணிந்தான்றிருக் கேதீச்சரத் தானே. 7.

அட்டன்னழ காகவரை தன்மேலர வார்த்து
மட்டுண்டுவண் டாலும்பொழின் மாதோட்டநன் னகரில்
பட்டவரி நுதலாளொடு பாலாவியின் கரைமேல்
சிட்டனமை யாள்வான்றிருக் கேதீச்சரத் தானே. 8.

மூவரென விருவரென முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும்பொழின் மாதோட்டநன் னகரில்
பாவம்வினை யறுப்பார்பயில் பாலாவியின் கரைமேல்
தேவனெனை யாள்வான்றிருக் கேதீச்சரத் தானே. 9.

கறையார்கடல் சூழ்ந்தகழி மாதோட்டநன் னகருள்
சிறையார்பொழில் வண்டியாழ்செயுங் கேதீச்சரத் தானை
மறையார்புக ழூரன்னடித் தொண்டனுரை செய்த
குறையாத்தமிழ் பத்துஞ்சொலக் கூடாகொடு வினையே. 10.

திருச்சிற்றம்பலம்.

---

## தக்ஷிண கைலாச மான்மியத்தில்
## இரண்டாம் அத்தியாயத்திலே கூறப்பட்டுள்ள
# திருக்கேதீச்சர மகிமை.

---

சூதமுனிவர் நைமிசாரணிய வாசிகளை நோக்கி, "முன்னொரு காலத்தில் வாயு பகவான், தன்னோடு மாருகப் போர் செய்த ஆதிசேடன் ஆயிரம் பணமகுடங்களால் மகாமேருவை மறைக்க, அவனை விலக்கி, அம் மகாமேருவின் மூன்று சிகரங்களை வன்மையாற் பிடுங்கி, அவற்றுள் ஓர் சிகரத்தைத் திரிகூடாத்திரியாகத் தாபித்து, முனிவர்களே! பின்னர் இரண்டாவது சிகரத்தைக்

கேதீச்சரமாகத் தாபித்துச் சென்றான். இன்பமுண்டாக்குவோரும் மகாதேவருமாகிய சிவபெருமான், அங்கே சுயம்புவும் நித்திய ரூபமாயெழுந்தருளியிருக்கின்றார். முனிவர்களே! கேதீச்சர மஹா லிங்கம் பாலாவியின் கரையிலே சகல லோகங்களுக்கும் நன்மையுண்டாக்கும் பொருட்டு வீற்றிருக்கின்றது. உத்தமனாகிய அந்தணன் அங்கே மகத்தாகிய பாலாவியில் ஸ்நாநஞ் செய்து பிதிர் தேவர்களுக்குத் தருப்பணம் பண்ணிக் கேதீச்சர லிங்கத்தை நமஸ்கரித்துத் தசதான மியற்றுவானாயின் அவன் சாயுச்சிய பதம் பெறுகின்றான்; நிச்சயம்; எந்தமனிதன் பிறவியிடையே கேதீச்சரத் தியானஞ் செய்வானோ அவன் சகல பாவங்களினும் நீங்கிப் பரிசுத்தனாய்ச் சிவலோகத்தில் பெருமையுறுகின்றான். எவனேனுமொருவன் பாலாவியிலே ஸ்நானம் செய்து பின்பு கேதீச்சரப் பிரபுவை வணங்கினால் அவன் கையிலே போக மோக்ஷங்களிருக்கும். இவ்விஷயத்தில் ஆராய்ச்சி செய்யவேண்டுவதில்லை. பாலாவியிலே ஸ்நானம் பண்ணிப் பின்பு கேதீச்சரலிங்க சேவை செய்பவன் பிரமகத்தி முதலிய பாவங்களினின்றும் நீங்குகின்றான். இங்கே ஐயமில்லை. உத்தமனாகிய மனிதன் பாலாவியின் கரையிலே பிண்டங் கொடுக்கில் கயாச்சிராார்த்த சமமாகிய புண்ணியத்தை அடைகின்றான். இவ்விடத்திற் சந்தேகமில்லை.

பிரமா, விஷ்ணு, ருத்திரர், முதலானோரும், தேவர், கந்தருவர், இராக்கதர், வித்தியாதரர், நாகர், சாத்தியர், கின்னரர், கருடர், ஆதித்தர், வசுக்கள் என்னுமிவர்களும், அங்ஙனமே உண்மையறிந்தோராகிய முனிவர்களும் என்றும் மகிழ்ச்சியடைந்த மனமுடையராய் இந்த ஸ்தலத்தில் வசித்தார்கள். ஆதலால் அதன் வைபவத்தை யான் சொல்ல வல்லேனல்லேன். பிறரும் வல்லரல்லர். பசு, பக்ஷி, மனிதர்கள் சகலரும் மிருகம் முதலிய சகல ஜந்துக்களும் எப்பொழுது மரணமடைந்தாரோ அப்பொழுது கேதீச்சரப் பிரபாவத்தினால் சிவாலயத்தின் பாகத்திலே தலைவைத்துக் கிடப்பவராவர். தருமரூபியாகிய சிவபெருமான் அவரனைவருடையவும் வலக்காதிலே பிரணவ மந்திரத்தை உபதேசித்தருளுவர்.

ஆகலாற் சாயுச்சிய பதவியை மனிதர், பக்ஷி, மிருகம் முதலிய சகல சரீரிகளுமடைந்தார்கள்; அதுபற்றி இந்த ஸ்தலத்தையொத்த புண்ணியஸ்தலம் முன்னுண்டாயதுமில்லை. இனியுண்டாவதுமில்லை. *மகாதுவட்டாபுரத்திலே மனிதனாவது செந்துவாவது செனிக்கில் முத்தியவர்கையதாகும்.

ஏனைய செல்வங்கள் சொல்லவேண்டுமா? நல்லவனாயினும் தீயவனாயினும் இந்த ஸ்தலத்திலே மரணம் வரையும் பாலாவியிலே ஸ்நானம் பண்ணி அதன்மேல் கேதீச்சரப் பிரபுவை வழிபட்டுப் பிக்ஷையெடுத்தாவது விடுத்தாவது இந்திரிய நிக்கிரகஞ் செய்திருப்பானாயின் அவன் குலகோடியோடு கூடிச் சிவசாயுச்சியமடைவான். இந்த ஸ்தலத்திலே மனிதன் பக்தியோடு பஞ்சாக்ஷர மந்திரத்தைச் செபித்து உருப்போடுவானாயின் அவன் சித்தியடைவன். இதில் ஐயமில்லை'' என்று சொல்ல முனிவர்கள் "இந்த ஸ்தலம் கேதீச்சரமென்று முனிவரே நீர் சொன்னீர். மகாதுவட்டாபுரம் என்னும் பெயர் எங்ஙனம் இதற்கெய்தும்'' என்று வினவினார். அது கேட்ட சூதமுனிவர் முற்காலத்திலே துவட்டா வந்து பாலாவியிலே ஸ்நானஞ் செய்து கேதீச்சரலிங்கத்தைப் பூசித்து உத்தமோத்தமமாகிய தவத்தைச் செய்தான். இவ்வமயத்திலே மகாதேவரும் பிரபுவுமாகிய சிவபெருமான் அவனது தவத்தினாலே திருவுள மகிழ்ந்து பார்ப்பதியம்மையாரோடு தோன்றியருளினார். துவட்டா அவரைத் தரிசித்து மேலாகிய பக்தியோடு துதிக்கத்தொடங்கினான்.

"அம்மையோடு கூடியவரே! உருத்திரராகிய உமக்கு நமஸ்காரம். பரமான்மாவாகிய உமக்கு நமஸ்காரம். கேதீச்சரப் பிரபுவே! சேதுமத்திய வாசியாகிய உமக்கு நமஸ்காரம்; நமஸ்காரம். அனைத்துக்கும் நாயகராகிய உமக்கு நமஸ்காரம்; அச்சத்தை யொழிப்பவரே! உமக்கு நமஸ்காரம்; கேதீச்சரப்

---

* மகாதுவட்டாபுரமென்பது மாதோட்டமென வழங்குகின்றது போலும்.

பிரபுவே ! சேதுமத்திய வாசியாகிய உமக்கு நமஸ்காரம் ; நமஸ்காரம். கேதீச்சரப் பிரபுவே ! ஆதிமத்தியாந்தரகிதரும் ஆதாரத்திற்குறைவிடமானவரும் சேதுமத்தியவாசியுமாகிய உமக்கு நமஸ்காரம். கேதீச்சரப் பி ர பு வே ! பிரமா விஷ்ணு ஸ்வரூபமும் சிருட்டி ஸ்திதிகளுக்குக் காரணரும் சேதுமத்தியவாசியுமாகிய உமக்கு நகஸ்காரம் ; நமஸ்காரம். கிருபாசமுத்திரமாகிய கேதீச்சரப் பிரபுவே ! உமாதேவியாரது திவ்வியமாகிய பாதி வடிவுடையவரும் சேதுமத்தியவாசியுமாகிய உமக்கு நமஸ்காரம் ; நமஸ்காரம். சுந்தரமான ஸ்வரூபமுடையவராகிய உமக்கு நமஸ்காரம். சுந்தரமுடைய பார்ப்பதியம்மையாருக்குப் பிராண நாயகராகிய கேதீச்சரப் பிரபுவே ! சேதுமத்தியவாசியாகிய உமக்கு நமஸ்காரம் ; நமஸ்காரம். உலகத்திற்காதாரமானவரே ! உமக்கு நமஸ்காரம். கேதீச்சரப் பிரபுவே ! செந்தாமரை மலர் போலுந் திருவடிவுடையாரும் சேதுமத்தியவாசியுமாகிய உமக்கு நமஸ்காரம் ; நமஸ்காரம். கேதீச்சரப் பிரபுவே ! புத்திரனைத் தருக ; அருளைத் தருக ; நல்ல புத்தியையுந் தருக ; சேதுமத்தியவாசியாகிய உமக்கு நமஸ்காரம் ; நமஸ்காரம்''. இந்த ஸ்தோத்திரத்தினாலே திருவுளமகிழ்ந்து சிவபெருமான் துவட்டாவுக்கு இதனைத் திருவாய்மலர்ந்தருளினார்:- "துவட்டாவே ! சொல்லுதும் கேள். இந்த க்ஷேத்திரம் எவற்றினு முத்தமோத்தமமானது. ஆதலால், நீ இங்கே வசிக்குக. நம்மீது பத்தி யுனக்குண்டாகும். இவ்வுலகத்திலே இன்றுதொட்டு இந்த ஸ்தலத்திற்குத் துவட்டாபுரம் என்னும் பெயருண்டாம். நமதருளினால் உனக்கு விசுவகன்மா வெனும் புத்திரனுண்டாவான்'' என்று வரங் கொடுத்துச் சிவபெருமான் மறைந்தருளினார். ஆதலால் "இந்த ஸ்தலத்தை யொத்த ஸ்தலம் முன்னுண்டானதுமில்லை, இனியுண்டாவதுமில்லை'' என்றுங் கூறினார்.

திருச்சிற்றம்பலம்.

---

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
மயிலணி : : சுன்னுகம்,
இலங்கை.

சுந்தரம்ஸ் லிமிட்டெட்,
கொழும்பு.
J. N. 3505-49.